**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**OS.NO.144/2019**

Name : பானு

Father Name : பக்தராஜூரெட்டி

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 5.8.2024

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். பிரதிவாதி ஆஜர்.

குறுக்கு விசாரணை

நான் படிக்கவில்லை. நான் லத்தேரி சேர்ந்தவர். முதல் பிரதிவாதி வசந்தா என் உடன் பிறந்த சகோதரி. நாங்கள் மொத்தம் 4 சகோதரிகள் மற்றும் 4 சகோதிரிகள். நான் பிறந்ததிலிருந்து லத்தேரியில் தான் இருக்கிறேன். வசந்தா திருமணமாகி குடியாத்தில் உள்ளார். 2ம் பிரதிவாதி ஆறுமுகம் 1ம் பிரதிவாதிவசந்தாவின் கணவர். வழக்கு சொத்து லத்தேரியை அடுத்த கோரப்பட்டறை கிராமத்தில் உள்ளது. அதை நான் 2014-ல் தான்வாங்கினேன். இது எங்களது பூர்வீக சொத்து அல்ல நான் சுயமாக கஷ்டப்பட்டு வாங்கியது. நான் பங்க் கடை, டீ கடை வைத்து சம்பாதித்தேன். 2016 க்கு முன்பு லத்தேரியில் தான் இருந்தேன். இந்த தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு லத்தேரியில் வேறு ஒரு வீட்டில் இருந்தோம். நான் காலிமனையாகத்தான் வாங்கினேன். நான் லத்தேரியில் இருக்கும் போது எனது தாய், தந்தை அனைவரும் தான் இருந்தோம். தற்போது என் சகோதரர், சகோதரிகள் வெளியே போய் விட்டதால் லத்தேரியில் உள்ள அந்த பூர்வீக வீட்டில தான் நான் இருக்கிறேன். அந்த பூர்வீக சொத்தில் எங்களுக்குள் பாகப்பிரிவினை ஆகவில்லை.

இந்த பூர்வீக சொத்திலிருந்து சுமார் முக்கால் மைல் தள்ளி இந்த தாவா சொத்து உள்ளது. தற்பொழும் நான்வியாபாரம் செய்கிறேன். நான் தனியாக பல சுயதொழில்கள் செய்து பணம் சம்பாதிக்கும் அளவிற்கு திறமையானவர் என்றால சரிதான். வங்கியில் எனக்கு அக்கவுண்ட் உள்ளது. சென்டரல் பேங்க் லத்தேரி, கூட்டுறவு வங்கி லத்தேரியிலும் உள்ளது. வங்கிக்கு நான் போய் வருவதுண்டு. தாவா சொத்தை கிருஷ்ணாபுரம் குமாரிடம் வாங்கினேன். தாவா சொத்தை வாங்கும் போது நான், முதல் பிரதிவாதி வசந்தா அவரது கணவர் ஆகியோர் ஒற்றுமையாகத்தான் இருந்தோம் என்றால சரிதான். முதல் பிரதிவாதிக்கு 3 பெண்கள். அவரது கணவர் தள்ளுவண்டியில் ஓட்டல் வைத்திருக்கிறார் என்றால் எனக்கு தெரியாது அப்போது வைத்திருந்தார் இப்போது தெரியவில்லை. அவர்களிடம் பேசி 6 வருடமாகிறது.

எனக்கு திருமணமான ஒரு வாரத்தில் கணவரை பிரிந்துவிட்டேன். அவர் தருமபுரியைச்சேர்ந்தவர். நான்தனியாகத்தான் வாழ்ந்து வருகிறேன் எனக்கு குழந்தைகள் இல்லை. முதல் பிரதிவாதிக்கு கஜலட்சுமி, லிவியாஸ்ரீ மற்றும் பிரபாவதி. அதில் கஜலட்சுமி தான் பெரியவர் அவரை நான் தான் வளர்த்தேன். முதல் பிரதிவாதி அடுத்தடுத்த குழந்தைகள் பிறந்த காரணத்தினாலும், அவர்களை வளர்க்க அவர்களுக்கு முடியாது என்ற காரணத்தினாலும், எனக்கும் குழந்தையின் மீது பாசம் இருந்த காரணத்தினால் நான் வளர்த்தேன். நான் இந்து மதத்தைச்சேர்ந்தவர். நான் குழந்தையின் பேரில் சொத்து எழுதி வைக்கலாம் என்று கூறினேன் என்றாலும், ஆனால் பெரியவர்கள் திருமணமாகாத பெண் மீது எழுதி வைக்கவேண்டாம் என்று கூறியதால் சொத்து எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல.

நான் குமாரிடம் கிரையம் வாங்கிய 29.8.2016 தேதியிட்ட கிரையப்பத்திரம் எங்கே என்றால் என் சகோதரி முதல் பிரதிவாதி வசம் உள்ளது. முதல் பிரதிவாதி வசந்தாவின் குழந்தைகளுக்கு சொத்தை எழுதி வைக்கவேண்டும் என்று கூறினேனா என்றால் இல்லை. ஆனால் பிள்ளைகளை வளர்த்தேன் சொத்தெல்லாம் எழுதிவைக்க சொல்லவில்லை. 3 பிள்ளைகளை வளர்த்தேனா என்றால் அவர்கள் அவ்வப்போது வருவார்கள் போவார்கள். உயில் எழுதப்போனேனா என்றால் எனக்கு உடம்பு சரியில்லை என்று அழைத்துச்சென்று எனக்கு நன்றாக பேசக்கூட வரவில்லை அந்த நேரத்தில் எல்லாம் எழுதிக்கொண்டு வந்து உள்ளே அழைத்துச்சென்று கைநாட்டு வைக்கும்படி கூறினார்கள். எந்த தேதியில் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேன் என்று ஞாபகமில்லை. நான் உயில் எழுதினேனா இல்லையா என்றால் நான் எழுத சொல்லி சொல்லவில்லை அவர்கள் எழுதினார்கள். சார்பதிவாளர் என்னிடம் உயில் எழுதியதாக சொன்னார்களா என்றால் என்னிடம் எதுவுமே சொல்லவில்லை. சார்பதிவாளர் அலுவலகத்திற்கு போனேன் கைநாட்டு கேட்டார்கள் போட்டேன் வந்துவிட்டேன் என்னிடம் யாரும் எதுவும சொல்லவில்லை. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் பத்தி 5-ல் சார்பதிவாளா அலுவலகத்தில் என்னால பதிவு செய்யப்பட்டதாக கூறப்படும உயில் 10 நாட்களுக்குள் என்னிடம் ஒப்படைக்கப்படும் என்று என்னிடம் தெரிவித்தனர் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்திலேயே அன்றைய தேதியில் உயில் எழுதியதாக சொல்லியுள்ளேன் என்றாலும், தற்பொழுது மாற்றி சொல்கிறேன் என்றாலும சரியல்ல. 23.10.2018 அன்று நான் எழுதியது உயில் இல்லை என்றாலும், தானசெட்டில்மெண்ட் பத்திரம் என்றாலும், தற்பொழுது வழக்கிற்காக மாற்றி உயில் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால சரியல்ல. சாட்சி சொல்கிறார் நான் உயில் எழுதப்போனது வந்தது உண்மைதான் ஆனால் செட்டில்மெண்ட் என்று என்னிடம் சொல்லவில்லை. நான் முன்னுக்கு பின் முரணமாக சாட்சி சொல்வது வழக்கம் என்றாலும், நான் தற்பொழுது மாற்றி சற்றுமுன்பு உயில் எழுத செல்லவில்லை என்றும்,

தற்பொழுது உயில் எழுத சென்றேன் என்றுசொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு எழுத படிக்கத் தெரியாததால் என்ன செய்கிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை.

உயில் என்று நம்பி கையெழுத்து போட்டேனா என்றால் ஆமாம். அப்போ நான் உயில் எழுதப்போனேன் என்று தெரியுமா என்றால் தெரியாது உடம்பு சரியில்லை என்பதால் போனேன். அவ்வாறு உடல்நிலை சரியில்லாததற்கு ஆவணம் இல்லை. நான் எந்த மருத்துவமனைக்கும் சென்று சிகிச்சை பெறவில்லை. நான் பலமநேரிக்கு சென்று மருந்து சாப்பிட்டேன். அவ்வாறு நான் மருந்து சாபிட்டதற்கு ஆவணம் இல்லை. எனக்கு உடல்நிலை சரியில்லை என்பவது வழக்கிற்காக நான் கண்டுபிடித்த பொய் என்றால சரியல்ல. 10 நாட்கள் கழித்து சார்பதிவாளரிடம் சென்று நான் எழுதி வைத்த உயிலை கொடுங்கல் என்று கேட்டேன். ஒரு ஆவணம் முதல் பிரதிவாதியின் பேரில் எழுதிவைத்தேன் என்றாலும், அது செட்டில்மெண்ட் ஆவணம் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 23.10.2018 அன்று ஆவணம் எழுதினேன் என்றால சரிதான். எழுதிய பிறகு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். எத்தனை மாதம் கழித்து புகார் கொடுத்தேன் என்று எனக்கு கவனமில்லை.

நான் லத்தேரி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் அவ்வாறு புகார் கொடுக்காமல் பொய் சொல்கிறேன் என்றால சரியல்ல. அதுபோல் நான் புகார் கொடுத்தேன் என்பதற்கும், அதை அவர்கள் பெற்றுக்கொண்டார்கள் என்பதற்கு ரசீது இல்லை என்றால சரியல்ல. அந்த ஆவணங்கள் இந்த வழக்கிற்காக தயார் செய்தேன் என்று சொல்வது சரியல்ல. இந்த ஆவணம் எழுதிக்கொடுத்தது 23.10.2018. ஆனால்புகார் கொடுத்ததாக சொல்வது 31.1.2018 என்றால் தேதி ஞாபகமில்லை. நான் தாக்கல்செய்துள்ள வா.சா.ஆ5-ல் 1 என்பது அழிக்கப்பட்டு 12 என்று போடப்பட்டு உள்ளது என்றால் எனக்கு தெரியாது எனக்கு படிக்கத்தெரியாது கையெழுத்து போடத்தெரியாது. என்னை வற்புறுத்தி இந்த ஆவணம் எழுதி வாங்கினார்களா என்று சொல்கிறீர்களா என்றால் ஆமாம்.

நான் 29.8.2016 அன்று கிரையம் வாங்கியதாக சொல்லப்பட்ட கிரையப்பத்திரத்தை முதல் பிரதிவாதிவசந்தாவிடம் தான் கொடுத்துள்ளேன். இந்த ஆவணம் எழுதிய பிறகு தான் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை நான் உடல்நிலை சரியில்லாமல் இருந்த பிறகு அவர்களே எடுத்துச்சென்று விட்டார்கள். இந்த விஷியத்தை என்னுடைய வழக்கிலோ, முதல்விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. 23.10.2018 தேதியில் தானசெட்டில்மெண்ட் எழுதிய பிறகு அந்த சொத்து குறித்த அசல் பத்திரத்தை நான் தான் முதல்பிரதிவாதியிடம கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான்பத்திரம் எழுதவில்லை. நான் போய் கேட்டபோது என் தங்கை வாங்கி சென்றுவிட்டதாக சொல்லிவிட்டார்கள். நான் வழக்கிற்காக உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது எழுதிக்கொண்டார்கள் என்று சொல்கிறேன்

என்றால' சரியல்ல. 23.10.2018ல் முதல் பிரதிவாதியின் பெயரில' தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிய பிறகு நான் தான் தானாக முன்வந்து கிரையப்பத்திரத்தின் அசலை முதல் பிரதிவாதியிடம் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

நான் முதல் பிரதிவாதியின் குழந்தையை வளர்த்தேன் என்றாலும், அந்த குழந்தைகளுக்கு பிறகாலத்தில் ஆதரவு வேண்டும் என்பதற்காக 23.10.2018-ல் ஆவணம் எழுதினேன் என்று சொன்னால' சரியல்ல. அந்த ஆவணம் நான் சுயவிருப்பத்துடன் யாருடைய வற்புறுத்தலுமின்றி எழுதியது என்றால' சரியல்ல. என்னை வற்புறுத்திதான் பத்திரம' எழுதினார்கள் என்று சொல்கிறேன் என்றால' சரிதான். என் அண்ணன் பெயர் ஸ்ரீராம 'என்றால் 'சரிதான். லத்தேரி காவல்நிலையத்தில் இந்த வீடு ஏன் எழுதிக்கொடுத்தாய் என் அண்ணனுக்கும், முதல் பிரதிவாதிக்கும் சண்டை என்றாலும், அதற்காகத்தான் புகார் கொடுக்கப்பட்டதா என்றாலும் வீட்டிற்காக நான் புகார் கொடுக்கவில்லை பிரதிவாதிகள் தான் புகார்கொடுத்தார்கள். என் அண்ணனின் தூண்டுதலின்பேரில் தான் இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வீடு காலி பண்ணிட்டு போ என்று சொன்னதால' தான்இந்த வழக்கை போட்டேன். இந்த வழக்கு போட்டது என் அண்ணனுக்குதெரியுமா என்றால் தெரியாது. நானும், என் தம்பி துரையும் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல் செய்தோம்.

என் தம்பி நீதிமன்றத்திற்கு வரவில்லை. இந்த ஆவணம் எழுதி எவ்வளவு நாளிற்குள் காலி செய்யச்சொன்னார்கள் என்றால் வசந்தா ஆறுமுகத்திற்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தபிறகு ஒரு வாரம் கழித்து என்னை காலி செய்யச்சொல்லி கேட்டார்கள் அதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,

வேலூர்.